# ஆசிரியர் தேர்வு வாரியம் சென்னை – 6
# பத்திரிக்கை செய்தி

ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் 2017 ஆம் ஆண்டு ஆசிரியர் தகுதித்தேர்வு தாள் II ல் தேர்ச்சி பெற்ற 18769 பட்டதாரி ஆசிரியர்களுக்கு கடந்த 24.07.2017 முதல் 28.07.2017 வரை சான்றிதழ் சரிபார்ப்பு நடைபெற்றது. இச்சான்றிதழ் சரிபார்ப்பில் கலந்துக்கொள்ள இயலாத 701 பணிநாடுநர்கள் மற்றும் 2017 ஆம் ஆண்டிற்கான பி.எட். கல்வியியல் சான்று பெற இயலாத காரணத்தால் பி.எட். சான்று அளிக்காத 535 பணிநாடுநர்கள் ஆகியோர்களுக்கு மீண்டும் சான்றிதழ் சரிபார்ப்பிற்கு ஒரு வாய்ப்பு வழங்கப்பட உள்ளது.

சான்றிதழ் சரிபார்ப்புக்கு கலந்துக்கொள்ளாதவர்கள் மற்றும் பி.எட்., சான்று அளிக்காத பணிநாடுநர்களுக்கு விழுப்புரம் மற்றும் மதுரையில் 25.10.2017 முதல் 27.10.2017 வரை நடைபெறும் சான்றிதழ் சரிபார்ப்பில் கலந்துக்கொள்ள வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. சான்றிதழ் சரிபார்ப்பு அழைப்புக்கடிதங்கள் ஆசிரியர்தேர்வு வாரிய இணையதளமான **www. trb.tn.nic.in** . என்ற முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். தனியாக அஞ்சல் மூலம் அழைப்புக் கடிதம் அனுப்பப் படமாட்டாது. இணையதளத்தில் வெளியிடப்படும் அழைப்புக் கடிதத்தினையே எடுத்துவருதல் வேண்டும்.

மேற்கண்டவாறு வழங்கப்பட்டுள்ள வாய்ப்பினை உரிய பணிநாடுநர்கள் தவறாது பயன்படுத்திக்கொள்ளுமாறு தெரிவிக்கலாகிறது.

| | | |
|---|---|---|
| சான்றிதழ் சரிபார்ப்பு நாள் மற்றும் நேரம் | : | 25.10.2017 முதல் 27.10.2017 முடிய காலை 9.30 மணி |
| இடம்: சான்றிதழ் சரிபார்ப்பு மையம் – **மதுரை** | : | நிர்மலா மகளிர் மேல்நிலைப்பள்ளி, காமராஜர் சாலை, மதுரை–625 009 |
| இடம்: சான்றிதழ் சரிபார்ப்பு மையம் – **விழுப்புரம்** | : | அரசு (மகளிர்) மேல்நிலைப்பள்ளி, விழுப்புரம்– 605 602 |

**13.10.2017** தலைவர்